Murder by Naxalites.

* 168. Q THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any person was killed by Naxalites on or about February 8, 1973, in Nagarasampatti in Dharmapuri district ; and

(*b*) if so, the action taken thereon ?

நக்சல்பாரிகளால் கொலை.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ஆம் நாளன்று அல்லது அந்த நாள் அளவில் தருமபுரி மாவட்டம், நாகரசம்பட்டியில் நக்சல் பாரிகளால் எவரேனும் கொல்லப்பட்டாரா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். கிருஷ்ணகிரி வட்டம், நாகரசம்பட்டியைச் சேர்ந்த திரு. என். வி. தர்மலிங்கம் செட்டியார் என்பவர் 8-2-1973-ல் நாகரசம்பட்டியில் உள்ள முக்கிய சாலையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். சடலத்தின் அருகே, "மா" வின் பொன் மொழிகளும் "மக்கள் நீதி மன்றத்தின் தீர்ப்பு" என்று எழுதப்பட்டுள்ள கையெழுத்து பிரதி வெளியீடுகளும் காணப்பட்டன.

(இ) இ.பி.கோ. 302-வது பிரிவின் கீழ் வழக்கு ஒன்று காவலரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் இருவர் குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமறைவாகவுள்ள எஞ்சிய மூன்று பேரைத் தேடிப்பிடிக்கும் முயற்சியில் காவலர் இடையறாது ஈடுபட்டு வருகின்றனர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள் தமிழ் நாட்டிலிருந்து மறைந்து விட்டன என்று நாம் எண்ணிக்கொண்டிருந்தோம். இப்பொழுது இந்தக் கேள்வியைப் பார்த்தால், பிப்ரவரி 1973-ல் கூட அவர்கள் நடவடிக்கை இருந்திருக்கு அவர்களுடைய நடவடிக்கை இப்பொழுது எப்படி இருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அறவே மறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. குறைந்துகொண்டிருக்கிறது. அது தொடங்கிய நேரத்திலிருந்த தீவிரம் இப்பொழுது இல்லை. அதிலும் குறிப்பாக அவர்களுடைய தலைவர் சாரு மஜும்தார்

காலமான பிறகு, அந்த இயக்கமே மெல்ல, மெல்ல—வேகமாகக்கூட என்று சொல்லலாம், மறைந்து கொண்டு வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, சமீபகாலத்தில், இரண்டு மூன்று ஆண்டுக்காலத்தில் தமிழகத்தில் நக்சல்பாரிகளால் ஏற்பட்ட கொலைகள், கொள்ளைகள் எவ்வளவு ? இன்றையதினம் நக்சல் பாரிகள் என்ற பெயரால் தமிழக சிறைச்சாலைகளில் எத்தனை கைதிகள் இருக்கின்றார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த நக்சல் பாரிகள் இயக்கத்தின் சம்பந்தமாக நடைபெற்ற கொலைகள் ஏழு, கொள்ளைகள், பெரிய கொள்ளைகள் நான்கு. சம்பந்தப்பட்ட 67 பேர் இரண்டு மாதங்கள் முதல் 7 வருஷம்வரை தண்டனை பெற்று, இப்பொழுது சிறைகளில் இருக்கிறார்கள். இந்தக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களில் 6 பேர் மரண தண்டனை பெற்றிருக்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, தமிழகத்தில் இந்த நக்சலைட் இயக்க தினுடைய பெருந் தலைவர் என்று சொல்லப்பட்ட கலியபெருமாள் மரண தண்டனை பெற்று அதை இந்த அரசு ஆயுள் தண்டனையாக மாற்றியிருப்பது, அந்த இயக்கத்தை இங்கே வளர்த்துவிட உதவிவிடுமா? அதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆயுள் தண்டனை என்றால், உடனடியாக விடுதலை செய்து விடுவது என்பதல்ல. மனம் திருந்துவார் என்ற நம்பிக்கையோடு அந்த மாற்றம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புலவர் ஒ. அறிவுடைநம்பி : தலைவரவர்களே, நக்சல்பாரிகளால் பழி வாங்கப்பட்ட அல்லது அவர்களுடைய தாக்குதலுக்கு ஆளான காவல் துறையினருக்குப் பரிசு வழங்க அரசிடம் ஏதாவது செயற் குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது போன்ற வீரச் செயல்களில் ஈடுபாடு கொண்ட காவல் துறையினருக்கு கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அறிஞர் அண்ணு பிறந்த நாள் அன்று தமிழக முதலமைச்சர் பதக்கம் என்ற பெயரால் பதக்கமும் பொற்கிழிகளும் அளிக்கப்பட்டு, வருகின்றன. அந்தப் பட்டியலில் இது போன்ற செயல்கள் இருந்தால், சேர்க்கப்படுவார்கள்.

Tamil Nadu Forensic Science and Chemical Laboratory.

* 169. Thiru. N. Sundaresa Thever (On behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Forensic Science and Chemical Laboratory has rendered any assistance to the Interpol Projects ; and

(*b*) if so, the details thereof ?